பக்கங்கள்:-23

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 10 | வெள்ளிக்கிழமை | 26.07.2024 | அதிர்வு 360

## கொழும்பில் ஒருவர் சுட்டுப் படுகொலை!

கொழும்பு, கிராண்ட்பாஸ் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

கிராண்ட்பாஸ் – வதுல்லவத்தை 06




# தமிழ்ப் பொது வேட்பாளரால் மக்கள் ஆணை மலினப்படும்

## விஷப்பரீட்சை விளையாட்டு வேண்டாம் என்று சி.வி.கே. சிவஞானம் வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

“தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதன் மூலமாகத்தான் மக்களின் ஆணையைப் பெற வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் காலாதிகாலமாக மக்கள் ஆணை வழங்கியிருக்கின்ற நிலைமையில் தற்போதைய முயற்சியானது அதனை மலினப்படுத்தலாம் என்ற அச்சம் உள்ளது.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார். 06

## ஹயஸ் - மோட்டார் சைக்கிள் மோதி குடும்பப் பெண் பரிதாப உயிரிழப்பு

### மானிப்பாயில் நேற்று மாலை சோகம்




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மானிப்பாய் – கட்டுடை சந்தியில் ஹயஸ் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதுண்டதில் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

சங்கானையைச் சேர்ந்த முகுந்தன் அஜந்தா (வயது 43) என்ற மூன்று பிள்ளைகளின் தாயே 06



இலங்கையின் அரசியல் செல்நெறியில் இன்றைய தினம் மிக முக்கியமானநாளாகமாறி இருக்கின்றது.

இலங்கை அரசியலின் நகர்வு எந்தத் திசையை நோக்கியதாக இருக்கும் என்பதைப் பற்றிய முடிவைத்தரும் நாளாக இன்று அமையப்போகின்றது.

ஜனாதிபதி தேர்தல் பற்றிய உத்தியோக பூர்வ அறிவிப்பை தேர்தல் ஆணையம் இன்று வெளியிடுவதால் மட்டுமல்ல, அதை ஒட்டி இன்று கட்டவிழப் போகும் பல விடயங்களால் இன்றைய தினம் 06





# ஊழல் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சி நிரலை செயற்படுத்த ஜனாதிபதி முன்வைத்த யோசனைக்கு அங்கீகாரம்

சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக கண்காணிப்பின் தொழில்நுட்ப உதவி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஊழலுக்கு எதிரான சட்ட, கட்டமைப்பு ரீதியான மற்றும் படிமுறை வரைவிற்கு அமைவாக “தேசிய ஊழல் எதிர்ப்பு நிகழ்ச்சி நிரலை” செயற்படுத்துவது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சர் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஊழலுக்கு எதிரான தேசிய நிகழ்ச்சி நிரல், 2023 இல் நிறைவேற்றப்பட்ட ஊழல் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துதல், அதற்கான செயல்திட்டத்தைத் தயாரித்தல், ஆறு மாதங்களுக்கு ஒருமுறை செயல்திட்டத்தின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் மற்றும் செயல் திட்டத்திற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளும் இந்த யோசனைக்குள் உள்ளடங்கியுள்ளது.

2025-2029 காலப்பகுதிக்காக தேசிய ஊழல் எதிர்ப்பு திட்டத்தை உருவாக்குதல், கணக்காய்வாளர் நாயகத்தின் சட்ட அதிகாரங்களை மேலும் விரிவுபடுத்துதல், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் திருத்தம் செய்தல் உள்ளிட்ட விடயங்களும் இந்த நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளது.

சிக்கலான கணக்காய்வுகளின் போது முழுமையான அறிக்கையொன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் அதன் ஊடாக வெளிப்படுத்தப்படும் ஊழல், மோசடி தொடர்பிலான குற்றவியல் விசாரணைக்காக, சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்களுடன் அடிப்படை தகவல்களை கணக்காய்வாளர் நாயகத்துடன் பகிர்ந்து கொள்ள அனுமதிக்கும் வகையில் திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய சரியான பொறுப்புகளை நிறைவேற்றத் தவறிய தலைமைக் கணக்கியல் அதிகாரிகள் உள்ளிட்ட அதிகாரிகளிடமிருந்து அது தொடர்பான கூடுதல் கட்டணத்தை அறவிடுவதற்கான அதிகாரத்தை கணக்காய்வாளருக்கு வழங்குவதற்கான பரிந்துரைகளும் தேசிய நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஒரு பயனுள்ள மற்றும் வெளிப்படையான சொத்து விவரத்தை வெளிப்படுத்தல் மற்றும் இணக்கப்பாட்டுக்கான நிறுவன கட்டமைப்பு தொடர்பிலான முன்மொழிவுகளும் தேசிய நிகழ்ச்சி நிரலில் உள்ளட்டக்கப்பட்டுள்ளன.

ஊழல் எதிர்ப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை வெளிப்படுத்துவது தொடர்பான திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான முரண்பாடுகள் தொடர்பிலான விதிமுறைகள், அவற்றை நிர்வகிப்பதற்கான வழிகாட்டுதல்களை வழங்குதல் மற்றும் அவ்வாறு செய்யத் தவறியது. அதிகாரிகளின் தண்டனை உள்ளிட்ட விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலும், ஊழல் தடுப்புச் சட்டத்திற்கு அமைவாக சிரேஷ்ட பிரஜைகளுக்காக இந்த சொத்து விவரங்கள் வெளியிடுவதற்கான இணையத்தளம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதோடு இந்த வேலைத் திட்டத்தினை ஆறு மாதங்கள் அல்லது வருடத்திற்கு ஒரு முறை மீளாய்வு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குற்றம் மற்றும் பணமோசடி மூலம் பெறப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கான தேசிய படிமுறைகள் மற்றும் கொள்கைகளை உருவாக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்காக லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள புதிய அதிகாரங்களின் பிரகாரம், முறையான செயற்பாட்டிற்கு தேவையான ஆதரவை வழங்குதல் மற்றும் புதிய விசாரணைகள் மூலம் முறையான வழக்குத் தொடுத்தல் மற்றும் தண்டனை வழங்குதல், அரசியல் ரீதியாக அடையாளப்படுத்தப்படும் நபர்களை அடையாளம் காண்பது போன்ற விடயங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த தேசிய நிகழ்ச்சி நிரல் ஊழல் வழக்குகள் தொடர்பான விசாரணைகள் மற்றும் வழக்குகளை வலுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளது. இது ஒரு நிறுவனத்தின் உரிமையைப் பற்றிய தகவல்களை பெற்றுகொள்வதற்கான உதவிகளை வழங்குவதற்கான நியதிகளை உருவாக்குவதற்கும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்த பொதுப் பயன்பாட்டிற்கான பதிவேடு ஒன்றை உருவாக்கவும் வழி வகுக்கும்.

அரச பெறுகைச் செயற்பாடுகளின் போது வெளிப்படைத் தன்மையை உறுதி செய்வதற்காக, சர்வதேச தரத்திற்கு ஏற்ப அரச பெறுகை சட்டத்தை அமுல்படுத்தவும், ஒரு பில்லியனுக்கும் அதிகமான பெறுகை ஒப்பந்தங்கள் குறித்த தகவல்களை வெளியிடுவது தொடர்பிலும் ஊழல் தடுப்பு நிகழ்ச்சி நிரலில் கூறப்பட்டுள்ளது.

வரி விலக்கு செய்யப்பட்ட நிறுவனங்களின் பெயர்களை பிரசித்தப்படுத்தல்,முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் முன்மொழிவுகளை மதிப்பிடுவதற்கான சரியான செயல்முறை உருவாக்கப்படும் வரை, மூலோபாய மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்துதல், பயிற்சி பெற்ற மற்றும் சுயாதீனமான பணியாளர்களை கொண்டிருக்கும் வகையில் அரச நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்தல், வருமானம் ஈட்டும் அரச நிறுவனங்களுக்குள் தற்காலிகமாக ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை எடுப்பது உள்ளிட்ட சாத்தியமான செயற்பாடுகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கியின் நேரடி நிர்வாகத்தை முடிவுக்குக் கொண்டுவரும் சேமலாப நிதியத்திற்காக புதிய முகாமைத்துவக் கட்டமைப்பை நிறுவுதல், நிறைவேற்று மற்றும் கண்காணிப்பு குழு உறுப்பினர்களை தெரிவு செய்யும் முறையை மேம்படுத்துவதன் மூலம் அரச உரித்துள்ள வங்கிகளுக்கிடையில் கூட்டுதாபன நிர்வாக கட்டமைப்பை உருவாக்குதல், நீதிச் சேவை ஆணைக் குழுவை பலப்படுத்தல் உள்ளிட்ட முன்மொழிவுகளும் இதற்குள் அடங்கியுள்ளன.

தேசிய ஊழல் எதிர்ப்பு நிகழ்ச்சி நிரல், தகவல் அறியும் உரிமையை வலுப்படுத்துவது தொடர்பான நியதிகளையும் உள்ளடக்கியுள்ளது.

மேலும், 2024 மே 29 ஆம் திகதி சர்வதேச நாணய நிதியத்தால் வெளியிடப்பட்ட நீடிக்கப்பட்ட நிதி வசதியின் இரண்டாவது மீளாய்வின் முன்னேற்றம் தொடர்பாக வழங்கப்பட்ட பரிந்துரைகளை கருத்தில் கொண்டு, நாட்டில் முழுமையாக ஊழல் எதிர்ப்பு கட்டமைப்பை வலுப்படுத்தும் திட்டத்தையும் இந்த நிகழ்ச்சி நிரல் முன்மொழிந்துள்ளது.

லஞ்ச, ஊழல் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு, அரச வருமான நிர்வாகம், அரச நிதி முகாமைத்துவம், அரச சொத்து கண்காணிப்பு மற்றும் நிர்வாகம், பணத்தூய்தாக்கலை தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியுதவி செய்வதை தடுத்தல் உள்ளிட்ட விடயங்களும் இதில் உள்ளடங்கியுள்ளன.




# தேயிலை கைத்தொழிலில் புதிய முன்னேற்றம் அவசியம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

"ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி நாட்டை நகர்த்த, இலங்கை தேயிலை கைத்தொழிலை அனைத்து பரிமாணங்களிலும் ஊக்குவித்தல் இன்றியமையாதது. இதற்கான முறையான திட்டம் அரச மற்றும் தனியார் துறைகளுடன் இணைந்து செயற்படுத்தப்படும்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு சினமன் கிரேண்ட் ஹோட்டலில் நேற்று ஆரம்பமான "கொழும்பு சர்வதேச தேயிலை மாநாட்டின்" ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் சங்கமும் இலங்கை தேயிலை சபையும் இணைந்து "தேயிலை – ஒரு வாழ்க்கை முறை மற்றும் வாழ்வாதாரம்" என்ற தொனிப்பொருளில் இரண்டு நாள் மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கையில் உள்ள தேயிலை உற்பத்தியாளர்கள் மற்றும் அது தொடர்பான வர்த்தகங்களின் கண்காட்சியும் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை, கென்யா, சீனா, இந்தியா, ஜப்பான், பிரித்தானியா, வளைகுடா நாடுகள் மற்றும் அமெரிக்கா போன்ற பல நாடுகளைச் சேர்ந்த தொழில் வல்லுநர்கள், நிபுணர்கள், முன்னணி வர்த்தக நாமங்கள் மற்றும் சமூக நிறுவனங்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றன.

நம்நாட்டு தேயிலை உற்பத்தியாளர்கள் மற்றும் அதனுடன் தொடர்புள்ள பல வர்த்தகங்களின் கண்காட்சிகளும் இதனுடன் இணைந்ததாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கொழும்பு தேயிலை வர்த்தகச் சங்கத்தின் தலைவர் சஞ்சய் ஹேரதினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு விசேட நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில்,

"கடந்த நான்கு வருடங்களில் நாங்கள் செய்த பணிகளை நான் நினைவு கூர வேண்டியதில்லை. ஆனால், இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்காக மேலும் அதிகமாக அந்நிய செலாவணி தேவை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எனவேதான் அடுத்த தசாப்தத்தில் நாட்டை ஏற்றுமதி பொருளாதாரமாக மாற்ற நாங்கள் உறுதி பூண்டுள்ளோம். நிகர பூஜ்ஜிய உமிழ்வை அடையும் இலக்கை எட்டிய மற்றும் டிஜிட்டல் மயமாக்கலை அடிப்படையாகக் கொண்ட அதிக போட்டி நிறைந்த பொருளாதாரமாகவும் இருக்க வேண்டும். இன்று விவாதிக்கப்படும் இந்த சட்டமூலத்தில் அதனுடன் தொடர்புடைய கோட்பாடுகள் மற்றும் நிறுவனக் கட்டமைப்பு ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதற்கு நாடாளுமன்றத்தில் அனைத்து கட்சிகள் மற்றும் எதிர்க்கட்சிகளின் ஆதரவு கிடைக்கும் என நம்புகிறேன். நாட்டை ஏற்றுமதி பொருளாதாரமாக மாற்றுவதில் தேயிலை கைத்தொழிலுக்கும் பெரும் பங்கு உள்ளது. தேயிலை உட்பட எமது பெருந்தோட்டக் கைத்தொழில், 19 மற்[illegible] ஆம் நூற்றாண்டுகளின் நிலப்பிரபுத்துவ பொருளாதாரத்திலிருந்து நவீன பொருளாதாரமாக எம்மை மாற்றியது. தேயிலை கைத்தொழில் இல்லையென்றால் இன்று

தொடர்ச்சி▼












# தேயிலை கைத்தொழிலில் புதிய முன்னேற்றம் அவசியம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

தொடர்ச்சி▲

இந்நாட்டில் நவீனமயப்படுத்தல்கள் ஏற்பட்டிருக்காது. தேயிலை தொழில் இல்லாவிட்டால் 'எல்ல' பிரதேசம் சுற்றுலாத் தலமாக மாறியிருக்காது.

நாங்கள் இப்போது மற்றொரு விசேட கட்டத்தில் இருக்கிறோம். இங்கே நாம் யதார்த்தமாக இருக்க வேண்டும். 30 – 40 வருடங்களாக நிலம் மற்றும் தோட்டம் மூலம் பெறக்கூடிய வருமானத்தை இழந்த நாடாக மாறிவிட்டோம். அந்த வருமானத்தை மீளப் பெற தோட்டத்தையும் நாட்டையும் அபிவிருத்தி செய்ய திட்டமிட்டுள்ளோம்.

அதிக வருமானத்தை பெறுவதில் கவனம் செலுத்தியுள்ள சிறிய தோட்ட உரிமையாளர்கள் மற்றும் பெரிய நிறுவனங்கள் ஆகிய இரண்டு துறைகளிலும் முன்னேறும் விவசாய வர்த்தகம் எமக்கு அவசியம். இரண்டு தனித்துவமான கட்டங்கள் இருப்பதோடு அவற்றில் முதலாவது சம்பளப் பிரச்சினையைத் தீர்ப்பதாகும். கடந்த பொருளாதார நெருக்கடியின் போது மிகவும் பாதிக்கப்பட்ட மக்களில் பெருந்தோட்ட மக்களும் உள்ளனர் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அத்துடன், பெருந்தோட்டம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் தற்போதுள்ள அனைத்து லயன் அறைகளையும் அரசாங்கம் கையகப்படுத்தி கிராமங்களாக மாற்றுவதற்கு மீண்டும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட எதிர்பார்த்துள்ளோம். அப்போது பெருந்தோட்ட வளர்ச்சியுடன் லயன் அறைகள் என்ற கருத்து ஒழிக்கப்படும் என எதிர்பார்க்கின்றோம்.

வட மாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட சில பகுதிகளை விட நுவரெலியா பகுதியில் பல பரிமாண வறுமை குறிகாட்டிகள் மிக அதிகமாக உள்ளது. எனவே, இந்த பிரச்சினையில் நாம் முதன்மையான கவனம் செலுத்த வேண்டும். மேலும், இந்த நேரத்தில் சில நிறுவனங்கள், குறிப்பாக சிறிய அளவிலான நிறுவனங்கள் எதிர்கொள்ளும் கடன் பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது என்பதில் சிக்கல் உள்ளது.

மேலும், ரஷ்ய சந்தைக்கான பிரவேசம் குறித்தும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ரஷ்யா மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் அவர்களை எந்த வகையிலும் பின்னோக்கித் தள்ளவில்லை. அவர்கள் எப்படியோ ஆசியாவிற்கு வந்துள்ளார்கள்.

ரஷ்யாவுடன்வர்த்தகம்செய்யப்எதிர்பார்த்துள்ளநாடுகளுக்கு புதிய நோக்கு தேவை என்பதுதான் பிரச்சினை. ஆனால் அதற்கு அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் வரும் வரை காத்திருக்க வேண்டும். அதுவரை, ரஷ்யாவிற்கு உங்கள் தேயிலையை அனுப்புவதற்கு உங்களுக்கு உரிய வழிகளைப் பயன்படுத்த வேண்டும்.

எமது நாட்டில் சிறு தோட்ட உரிமையாளர்கள் அதிகளவில் உள்ளனர், அவர்கள் மூலம் தோட்டத் தொழில்துறையை எவ்வாறு விவசாய வர்த்தகமாக மாற்றுவது என்பதில் கவனம் செலுத்த வேண்டும். நாங்கள் தேயிலையை மட்டும் பயிரிடுகிறோமா அல்லது உங்கள் பகுதிகளில் ஸ்மார்ட் விவசாயத்திற்கு இடமளிக்கிறோமா என்று தீர்மானிக்க வேண்டும். எதிர்வரும் காலங்களில் விவசாய வர்த்தகத்தின் வளர்ச்சிக்காக நாட்டின் ஏனைய பகுதிகளிலும் காணிகளை வழங்க எதிர்பார்க்கின்றோம். அதைப் பற்றி கண்டறிய உங்களுக்கு வாய்ப்பு உள்ளது.

எமது சில நிறுவனங்கள் வெளிநாடுகளுக்குச் சென்று தொழில் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன. தேயிலை தொழிலில் இலங்கை முன்னணியில் இருக்கும் வரை அரசாங்கத்திற்கு பிரச்சினை இல்லை. அதனை நாம் முன்னேற வேண்டும். தேயிலை சந்தையில் இலங்கை ஆதிக்கம் செலுத்த வேண்டும்." – என்றார்.






# அரசின் ‘உறுமய’ வேலைத்திட்டம் அரசியல் வேலைத்திட்டம் அல்ல!

## சுற்றுலாத்துறை, காணி அமைச்சின் செயலாளர் கூறுகின்றார்

“முழு உரிமையுள்ள காணி உறுதிப் பத்திரம் வழங்கும் ‘உறுமய’ வேலைத் திட்டம் அரசியல் வேலைத்திட்டம் அல்ல. எனவே தேர்தல் காலங்களிலும் இத்திட்டம் தொடர்ந்தும் செயற்படும்.”

– இவ்வாறு சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதான பத்திரன தெரிவித்தார்.

‘இரண்டு வருட முன்னேற்றமும் எதிர்காலமும்’ என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோத சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதான பத்திரன மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“இந்த இரண்டு வருட காலப்பகுதியில் இலங்கை மக்களுக்கான மிக முக்கியமான வேலைத்திட்டமான ‘உறுமய’ காணி உறுதிப்பத்திரங்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் எமது அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் இரண்டு ஆண்டுகளில் 20 லட்சம் காணி உறுதிப்பத்திரங்களை வழங்க எதிர்பார்த்துள்ளோம். இதுவரை 100,000 இற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

‘உறுமய’ வேலைத்திட்டம் என்பது பல கட்டங்களின் கீழ் செயற்படுத்தப்படும் ஒரு தொடர்ச்சியான வேலைத்திட்டமாகும். அதன் முதற்கட்டமே தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது ஒருபோதும் அரசியல் வேலைத்திட்டம் அல்ல. தேர்தல் காலங்களில் கூட இந்த காணி உறுதிகள் வழங்கப்படும். ஆனால் அதற்கு அரசியல் தலையீடு இருக்காது.

பிரதேச செயலாளரின் ஊடாக வழங்கப்படும் ஏனைய சேவைகளைப் போன்று இந்த காணி உறுதிப்பத்திரங்களும் வழங்கப்படுகின்றன. எனவே, தேர்தலுக்கான திகதியை நிர்ணயிப்பது, இந்த திட்டத்தை நிறுத்துவதற்கு ஒரு காரணமாக இருக்காது. இந்த திட்டம் எந்த தேர்தல் சட்டத்தையும் மீறாது.

ஏனெனில், இந்த காணி உறுதிகள் தேர்தல் காலத்தில் பொது மேடைகளிலோ அல்லது அரசியல்வாதிகளின் பங்களிப்புடனோ வழங்கப்படுவதில்லை. காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் செயல்முறையை மேலும் திறம்படச் செய்வதற்கு சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கு ஊக்கத் தொகைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.”– என்றார்.

# தூக்கில் தொங்கிய நிலையில் பெண்ணொருவரின் சடலம் மீட்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை, உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரோதய நகர் பிரதேசத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை உறவினர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்குச் சென்ற உப்புவெளி பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

உயிரிழந்த பெண் 2023 ஆம் ஆண்டு நோர்வே நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து திருகோணமலையில் திருமணம் முடித்தவராவார் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் வரோதயநகர் பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய றினா ஸ்ரீலா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.



பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்காகத் திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக உப்புவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..) முக்கியத்துவம் பெறப் போகின்றது.

+ தேர்தல் திகதி, வேட்புமனுத் தினம் யாது என்பது இன்று தெரியவரும்.

+ தேர்தலை இலக்கு வைத்து ஜனாதிபதி ரணில் அரசு நடத்தும் அரச சார்பிலான பிரசார தமாஷாக்கள் பலவும் இன்றுடன் மூடு விழாக் காணும்.

+ ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் தேர்தல் கூட்டு அல்லது அணி யாருடன் என்பது பெரும்பாலும் இன்று வெளிவர வாய்ப்பு உண்டு.

+ மொட்டுக் கட்சியின் தனி வழிப் பயணம் பற்றிய தகவலும் இன்று உறுதியாகும் என எதிர்பார்க்கலாம்.

+ ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படும் சமயத்தில் பொலிஸ்மா அதிபர் உயர்நீதிமன்ற உத்தரவில் பதவி இழந்துவிட்டார். பொலிஸ்மா அதிபர் விவகாரத்தில் ரணில் அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு யாது என்பதை பிரதமர் தினேஷ் குணவர்த்தனா இன்று நாடாளுமன்றத்தில் அறிவிக்க இருக்கின்றார். எது, எப்படி என்றாலும் மொட்டுக் கட்சிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் போக்குக்கும் இடையில் கசப்புணர்வு முற்றியுள்ள நிலையில், புதிய பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்கும் விவகாரத்தில் தமது மேலதிகாரத்தை கர்வமாக எண்ணிக் கொண்டு, குசும்பு பண்ண ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயன்றாலும், மொட்டுக் கட்சியின் தலைமைக்கு விசுவாசமாக நடக்க வேண்டிய இக்கட்டில் இருக்கும் பிரதமர் தினேஷ் குணவர்த்தனா ரணிலின் குசும்பை அங்கீகரித்துச் செயல்படபெரும்பாலும் பின்னடிப்பார். அதனால் உயர் நீதிமன்ற வழிகாட்டல் படி புதிய பொலிஸ்மா அதிபரை நியமிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கலாம்.

+ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறித்து கடைசியாக மொட்டுக் கட்சியின் உள்ளார்ந்த நிலைப்பாட்டை நாமல் ராஜபக்ஷ ஒருவாறு அம்பலப்படுத்திவிட்டார். பதவிக்காக – அதிகாரத்திற்காக – அரச வசதிகளுக்காக – ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பந்தம் பிடிக்கும் மொட்டுக் கட்சிப் பிரகிருதிகள் இன்று ஒரு முடிவு எடுத்தாக வேண்டி இருக்கும். காலம் காலமாக தாம் அணிவகுத்து நின்ற மொட்டுக் கட்சியா அல்லது நேற்று வந்து தங்களுக்குப் பதவி தந்த ரணிலா என்று அவர்கள் இன்று தீர்மானிக்க வேண்டியவர்களாக இருப்பர்.

+ தனது அமைச்சரவையில் நீதி அமைச்சராக இருக்கும் விஜயதாஸா ராஜபக்ஷ தமக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தல் களத்தில் இறங்குகின்றமையை உத்தியோகபூர்வமாக அறிவித்த பின்னர், அவரை – தமது போட்டியாளரை – தமது அமைச்சரவையில் வைத்துக்கொண்டு தேர்தல் சமாவைத் தொடர்வதா என்பது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று தீர்மானிக்க வேண்டி இருக்கும்.

– இப்படி இலங்கை அரசியலில் பல முடிச்சுகளை அவிழ்க்கும் மற்றும் பல புதிய முடிச்சுகளை போடும் தினமாக இன்றைய நாள் அமையப் போகின்றது...!

## தமிழ்ப் பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இந்தப் பொது வேட்பாளர் விவகாரம் என்பது விஷப்பரீட்சை என்றும் அவர் மீண்டும் கூறினார்.

தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் இருந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற முயற்சிகள் என்பது விஷப்பரீட்சையாகும்.

தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தித்தான் மக்களின் ஆணையைக் காட்ட வேண்டும் என்றில்லை. ஏனெனில் காலாதிகாலமாக நாங்கள் நிரூபித்து வந்த எங்களுடைய கோரிக்கைக்கு மக்கள் ஆணை வலுவாக இருக்கின்றது.

இப்போது மீண்டும் அதனை பெற்றுக் கொள்ள வேண்டுமெனக் கூறி விஷப் பரீட்சையில் இறங்குவது எமது மக்களின் அபிலாஷைகளைகளின் தெளிவுத் தன்மை சில நேரம் மலினப்படுத்தப்படலாம் என்ற ஒரு அச்சம் இருக்கின்றது.

இந்தநிலையில் எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் பொது வேட்பாளர் தொடர்பில் இதுவரையில் எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை. கட்சிக்குள் பல்வேறு கருத்துக்கள் இருப்பதால் இது சம்பந்தமாக நிச்சயம் விவாதிக்கப்படும். அதன் பின்னர் கட்சி ஒரு நல்ல முடிவை எடுக்கும்.

ஆனாலும், இதில் கட்சி கூட தற்செயலாகப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக இருந்தாலும் என்னைப் பொறுத்தவரையில் அதற்கு நான் ஒருபோதும் உடன்படமாட்டேன் என்பதைக் கட்சிக்குள் தெளிவாகச் சொல்லியிருக்கின்றேன்.

அத்தோடு என்னுடைய நிலைப்பாடு தொடர்பில் பகிரங்கமாகவே நான் பேசுவேன் என்பதையும் ஏற்கனவே கட்சியிலும் சொல்லியுள்ளேன். ஆகவே, என்னைப் பொறுத்த வரையில் விஷப் பரீட்சை தேவையற்றது என்பதாகவே கருதுகின்றேன்.” – என்றார்.

## கொழும்பில் ஒருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..) பகுதியில் நேற்று மாலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இருவர் காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் சிகிச்சை பலனின்றி ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிராண்ட்பாஸ் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஹயஸ் - மோட்டார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..) உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் அவருடன் பயணித்த மகள் ஒருவர் காயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயையும் மகளையும் வேகமாக வந்த ஹயஸ் ரக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் தாய் சம்பவ இடத்திலேயே பலியானார்.

விபத்தையடுத்து வாகனத்தின் சாரதியும் மற்றுமொரு நபரும் சம்பவ இடத்தில் இருந்து தப்பியோடிய நிலையில் வாகனத்தில் இருந்த இரு இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.

வாகனத்தில் வந்தவர்கள் மதுபோதையில் இருந்தனர் எனவும், சாரதியைப் பொலிஸார் விரைந்து கைது செய்ய வேண்டும் எனவும் வீதியில் கூடிய வலியுறுத்தியதுடன் பொலிஸாருடன் வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர். இதனால் அவ்விடத்தில் சில மணி நேரம் அமைதியின்மை ஏற்பட்டது.

அதனைத் தொடர்ந்து விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிளையும் ஹயஸ் வாகனத்தையும் பொலிஸார் மீட்டு பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்றனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை, தப்பியோடிய ஹயஸ் வாகனத்தின் சாரதியையும் மற்றைய நபரையும் கைது செய்வதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.





# வவுனியா இரட்டை கொலைச் சந்தேக நபர்களின் விளக்கமறியலை நீடித்து மேல் நீதிமன்று கட்டளை

(கே.வசந்தன்)

இரட்டைக் கொலை சந்தே நபர்களின் விளக்கமறியலை நீடித்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசர் இளஞ்செழியன் கட்டளை பிறப்பித்துள்ளார்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த வருடம் ஜூலை மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவர் மரணமடைந்திருந்தனர். இந்த இரட்டைக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் ஏழு பேர் கைது செய்யப்பட்டிருந்தமையுடன், அவர்களிடம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். அவர்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஒரு வருடமாக வழக்கு இடம் பெற்று வருவதுடன் சந்தேக நபர்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் பிரிவு 296 கட்டளை சட்டக் கோவையின் வழக்கில் விளக்கமறியல் நீடிப்பு தொடர்பில் மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

பிணைக்கு எதிராக விளக்கமறியல் நீடிப்பது தொடர்பாக சட்டப்பிரிவு 17 இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அரச சட்டத்தரணி ஆறுமுகம் தனுசன் மற்றும் விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோர் பிணைக்கு எதிராக வாதிட்டு ஒரு வருட காலம் விளக்கமறியலை நீடிக்க கோரியிருந்தனர். இதன்போது சந்தேக நபர்கள் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தலைமையில் 9 சட்டத்தரணிகள் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

வழக்கு விசாரணை தொடர்பில் கவனம் செலுத்திய மேல் நீதிமன்று, அவர்களது விளக்கமறியலை நீடித்து கட்டளை பிறப்பித்தது. இதன்படி மன்று 1- 6 வரையான சந்தேகநபர்களுக்கு எதிர்வரும் நவம்பர் 01 திகதி வரை விளக்கமறியல் நீடித்து கட்டளை வழங்கியதுடன், 7 ஆவது சந்தேக நபரான பிரதான சந்தேக நபருக்கு எதிர்வரும் பெப்ரவரி 25 வரை விளக்க மறியலை நீடித்து கட்டளை பிறப்பித்தது.

# வவுனியா குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அலுவலகம் இடமாறுவதால் சில தினங்களுக்கு சேவைகள் இடை நிறுத்தம்

(கே.வசந்தன்)

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் வவுனியா, வெளிச்சுற்று வீதியில் அமைந்துள்ள பிராந்திய அலுவலகம், 2024 ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி முதல் காமினி மகா வித்தியாலத்திற்கு முன்னால் மன்னார் வீதி, வவுனியா எனும் முகவரியில் அமைந்துள்ள கட்டடத்தில் நிறுவப்படவுள்ளது என குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனவே, வெளிச்சுற்று வீதி, வவுனியா எனும் முகவரியில் அமைந்துள்ள - தற்போது பொதுமக்கள் சேவைகளை வழங்கி வரும் - பிராந்திய அலுவலகத்தின் உத்தியோகபூர்வக் கடமைகள் 2024 ஒகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் நிறைவடையும்.

அதற்கமைய, 2024 ஒகஸ்ட் மாதம் 03 ஆம் திகதி முதல் 2024 ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி வரையில் இந்தத் திணைக்களத்தின் வவுனியா பிராந்திய அலுவலகத்தின் மூலம் பொதுமக்கள் சேவைகள் மேற்கொள்ளப்படமாட்டாது.

மேற்குறிப்பிடப்பட்ட இடத்தில் நிறுவப்படும் புதிய பிராந்திய அலுவலகத்தின் மூலம் 2024 ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி முதல் மீண்டும் பொதுமக்கள் சேவைகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


திகதி : 2024.07.24
இலக்கம் : 60

ஊடக அறிவித்தல்
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

கட்டுப்பாட்டாளர் நாயகம்,
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் நாயகம் விடுத்த ஊடக அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.


Muhurtham
Jewels
PRESENTS
PRADEEP
kumar
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
JULY
27
2024
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
PRINTING PARTNER
E PAPER PARTNER
DESIGN BY
FM
88.9 HD3 & 105.9
INK DRIP
முரசு
DESIGN WOLF.CA

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஆடிக் கலவர விளைவு

எல்லா வினைக்கும் எதிர்வினை உண்டு.

1983இல் தமிழ் தேசியம் மீது பௌத்த, சிங்களப் பேரினவாதம் ஆடிக் கலவரத்தைக் கொடூரமாகத் திணித்த வினைக்கும் பெரும் எதிர்வினையை அது எதிர்கொள்ள வேண்டியதாயிற்று.

கொந்தளிப்பு மிக்க ஈழத் தமிழர்களின் இனப் போராட்ட வரலாற்றில், வன்முறைப் புயல் வீசிய 1983 ஒரு திருப்புமுனை ஆண்டு எனலாம். அரச படைகளின் வன்முறையும், அதற்கு எதிரான போராளிகளின் எதிர் வன்முறையுமாக வன்செயல்கள் பிரவாகம் எடுக்கத் தொடங்கிய காலகட்டம் அதுதான்.

காலம் காலமாக பல இனக் கலவரங்களை இலங்கைத் தீவு கண்டு வந்திருந்த போதிலும், 1983 ஜூலையில் இடம் பெற்றது மற்றவற்றிலிருந்தும் பெரிதும் வித்தியாசமானதாக அமைந்தது. மிகக் கொடூரமானதாக - குரூரமானதாக - மிருகத்தனமானதாக - காட்டுமிராண்டித்தனமானதாக - அந்தக் கலவரம் முன்னெடுக்கப்பட்டது. அது வெறுமனே தமிழ் மக்களைப் பழிவாங்கும் திடீர் உணர்ச்சி வேகத்தில் எழுந்த ஒன்றாக அமையவில்லை. மாறாக, இனவழிப்பு எனக் கருதப்படும் விதத்தில் திட்டமிட்டு வகுக்கப்பட்டு, தருணம் பார்த்துக் கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூர தொடர் தாக்குதலாக அது அமைந்தது.

விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இராணுவத்தினர் திருநெல்வேலியில் கொல்லப்பட்டமையை அடுத்து தெற்கில் இனவெறித் தீயை மூட்டி, பிரசார எண்ணெய்யை ஊற்றி, பற்றியெரிய வைத்து, பெரும் கலவரமாக அது வெடிப்பதற்கு அரசு தரப்பு விடயங்களை முடிச்சு போட்டுக் கையாண்ட விதம், அரசின் விஷமத்தன போக்கை அப்பட்டமாக வெளிப்படுத்தி நின்றது.

தலைநகர் கொழும்பு உட்பட தென்னிலங்கையெங்கும் தட்டிக் கேட்கவும், தடுத்து விசாரிக்கவும் ஆள்கள் இன்றி தொடர்ந்த வன்முறையில், தமிழர் மரணமும், தமிழரின் சொத்துடைமை அழிப்பும் எல்லையின்றி, அளவு கடந்து நடந்தன.

கலகக்காரர்கள் கண்மூடித்தனமாகவோ, தறிகெட்டோ தாக்குதல்களை நடத்தவில்லை. செயற்படவில்லை. அவர்களின் தாக்குதல்கள் திட்டமிடப்பட்டு நெறிப்படுத்தப்பட்டவையாக அமைந்தன என சுயாதீன பார்வையாளர்கள் அறிக்கையிட்டார்கள்.

கலவரக்காரர்களுக்கு தமிழர்களின் வதிவிடங்கள், சொத்துக்கள், உடைமைகள், பொருளாதார மையங்கள் பற்றிய அச்சொட்டான விவரங்கள், குறிப்புகள், வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. அரச அதிகாரிகள், பொலிஸார், பாதுகாப்புத் தரப்பினர், அரசியல்வாதிகள் போன்றோரின் கறைபடிந்த கைகளும், வழிகாட்டலும் கூட இந்த அரச கொடூரத்தில் சம்பந்தப்பட்டிருந்தன என்று கூறப்படுகிறது.

தலைநகரில் மட்டும் தமிழர்களின் நூற்றுக்கும் அதிகமான தொழிற்சாலைகளும் பல நூற்றுக்கணக்கான வர்த்தக நிலையங்களும் சாம்பல் மேடாக்கப்பட்டன.

அன்று தமிழர்களுக்கே எதிராக என்ற நயவஞ்சக எண்ணத்துடன் விதைக்கப்பட்ட - முன்னெடுக்கப்பட்ட - பொருளாதார அழிப்பின் தொடர் விளைவைத்தான் 'ஓட்டப்பம் வீட்டை சுட்டது போல' இன்று இலங்கை நாடு முழுவதும் பொருளாதாரப் பேரிழப்பாக அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

தமிழர்களின் பொருளாதார அடித்தளங்களை நாசமாக்குவதற்காக பேரினவாதம் இட்ட தீ, அனுமன் இட்ட தீயாக இலங்கை தேசத்தையே இன்று பற்றி எரிய வைத்து நாசப்படுத்தி இருப்பது கண் கூடு.

தமிழ்த் தேசிய உணர்வெழுச்சியை அடக்கும் குறுக்கு வழி என்ற சிந்தனையோடுதான் பௌத்த - சிங்களப் பேரினவாதம் அந்த இனக் கலவரக் கொடூரத்தை பெரும் இன வழிப்பு நடவடிக்கையாக 1983 ஜூலையில் முன்னெடுத்தது. ஆனால் நடந்தது என்ன?

பேரினவாதத்தின் அந்த நோக்கத்துக்கு மாறாக, இந்த இனக் கலவரம் தமிழர் தேசமெங்கும் தமிழ்த் தேசிய மறுமலர்ச்சி எழுச்சியைத் தட்டி எழுப்பி, விழிப்புற வைத்து, வேகம் எடுக்கச் செய்தது. தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கான அக - புறச் சூழ்நிலைகளை அதுவே உருவாக்கிக் கொடுத்தது எனலாம். தமிழர்களின் அரசியல் விடுதலைப் போராட்டத்திற்கான தெளிவான பாதையை அந்த இனக் கலவரம் துலக்கமாக்கியது என்றும் கூறலாம்.

அந்தக் கறுப்பு ஜூலைக் கலவரமும், அதனால் ஏற்பட்ட பேரழிவுகளும் தமிழர் தேசமெங்கும் தமிழ் தேசிய உணர்வை மடைவாயை உடைத்து ஓடிய பெரு வெள்ளமாக பிரவாகம் எடுக்க செய்யும் வாய்ப்பையும் ஏற்படுத்தியது என்பதை சிங்களம் காலம் தாழ்த்தித்தான் புரிந்து கொண்டது.







# மகாராஷ்டிர கனமழை பாதிப்பு: மும்பையில் மீட்புப் பணி தீவிரம்

மகாராஷ்டிராவின் புனே, மும்பையில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

சியோன், செம்பூர், அந்தேரி போன்ற பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. வெள்ளநீர் குடியிருப்பு பகுதிகளில் புகுந்திருக்கும் நிலையில், கனமழை காரணமாக பல விமா னங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

மகாராஷ்டிர மாநிலத்தில் பருவமழை தீவிரமடைந்துள்ளது. கடந்த சில நாள்களுக்கு முன்பு கனமழை பெய்தது. இதில் மும்பை உள்ளிட்ட இடங்கள் அதிகமாக பாதிக்கப்பட்டன. தற்போதும் அதேபோன்றொரு கனமழை பெய்து வருகி றது. இன்று காலை 8.30 மணி வரை மும்பைக்கு சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ள வானிலை மையம், சில இடங்களில் மிக கனமழை பெய்யும் என்று எச்சரித்துள்ளது.

ஏற்கனவே பெய்த கனமழை காரணமாக மும்பை நகருக்கு தண்ணீர் வழங்கும் ஏழு ஏரிகளில் மோடக்-சாகர் ஏரி மற்றும் விஹார் ஏரி என்ற இரண்டு ஏரிகள் நிரம்பி வழிந்துவரு கின்றன. நகர் பகுதியில் விட்டுவிட்டு கனமழை பெய்வதால் வெள்ளநீர் தேங்கி, போக்குவரத்து இடையூறு ஏற்பட்டுள்ளது. இதனால், வாகனங்கள் பல கிலோ மீட்டருக்கு மெதுவாக ஊர்ந்து செல்லும் சூழல் நிலவுகிறது.

மும்பை மட்டுமல்ல தானே, புனே என மகாராஷ்டிரா மாநிலம் முழுவதும் கனமழை பெய்துவருகிறது. தானேயில் மும்ப்ரா போன்ற சில பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. புனேவில், பிம்ப்ரி, சிந்த்வாட்டில் உள்ள பல குடியிருப்பு வளாகங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதுதவிர புனே மாவட்டத்தில் லவாசா மலையில் நிலச்சரிவு ஏற்பட்டது. நிலச்சரிவு ஏற்பட்ட இடத்துக்கு 18 கிலோ மீற்றர் முன்பே வீதியில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் கனமழையின் தீவிரம் அதிகமாக இருந்துவரும் நிலையில், பாதிப்பும் அதிகமாக உள்ளன.

வானிலை ஆய்வு மையம், புனே மாவட்டத்துக்கு சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக் கைகள் எடுக்குமாறு மக்களை கேட்டுக் கொண்டுள்ளது. புனே நகரம், வெல்லா, முல்ஷி, போர் தாலுகா மற்றும் பல்வேறு அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகள் உள்ளிட்ட மாவட்டத்தின் பல பகுதிகளில் புதன்கிழமை இரவு முழுவ தும் கனமழை பெய்தது. இதனால், நகரத்தின் தாழ்வான பகுதிகளான சிங்ககட் சாலை, பவதான், பானர் மற்றும் டெக்கான் ஜிம்கானா முதலானவற்றில் உள்ள குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்தன.

புனே மாவட்ட ஆட்சியர் சுஹாஸ் திவாஸ் கூறும்போது, "காடக்வாஸ்லா அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக அணையில் இருந்து 35,000 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. மேலும், இது 45,000 கன அடியாக அதிகரிக்கப்படும். நீர் வெளியேற் றம் காரணமாக முத்தா ஆற்றின் தாழ்வான பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. கனமழையால் மேலும் வெள்ளம் ஏற்படும் என அஞ்சப்படுவதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பேரிடர் மேலாண்மை பிரிவினர் மற்றும் தேசிய பேரிடர் மீட்பு படையினர் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர். அவசியம் இல்லாதபட்சத்தில் மக்கள் யாரும் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம்." - என்றார்.

மழை பாதிப்புகள் தொடர்பான சம்பவங்கள் காரணமாக 4 பேர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். டெக்கான் பகுதியில், தங்களின் முட்டை விற்கும் தள்ளு வண்டியை நகர்த்த முயன்றபோது மின்சாரம் தாக்கி 3 பேர் உயிரிழந்தனர். முல்ஷி தேஹ்சில் பகுதியின் தாமினி காட் பகுதியில் கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவினால் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்துள்ளார் என மாவட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

"மாநில பேரிடர் படையுடன் இணைந்து தேசிய பேரிடர் படையும் இணைந்து மீட்புப்பணிகளில் ஈடுபட்டு வருகின் றன. ராணுவத்திடமும் பேசியுள்ளோம். தேவைப்பட்டால் இராணுவம் அழைக்கப்படும். நான் நிலைமையை உன்னிப் பாகக் கண்காணித்து வருகிறேன். மும்பைவாசிகளிடம் நான் வேண்டுகோள் விடுக்கிறேன். வீட்டிலேயே இருங்கள், தேவைப்பட்டால் மட்டும் வெளியே செல்லுங்கள்." என்று மகாராஷ்டிரா முதல்வர் ஏக்நாத் ஷிண்டே தெரிவித்துள்ளார்.

கனமழையால் புனேவின் நிலைமை மோசமான நிலையில் மீட்புப்பணிகளுக்காக இராணுவம் வரவழைக்கப்பட்டுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

புனேவின் சிங்ககட் பகுதியில் வெள்ளநீர் சூழ்ந்ததால் சிக்கிக்கொண்டிருந்த 400 பேரை இராணுவம் மீட்டுள்ளது என்று சொல்லப்படுகிறது.

கனமழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள சிங்ககட் பகுதியில் மீட்பு பணியில் இராணுவம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. தேவைப்பட்டால் ஹெலிகொப்டர் வசதி கொண்ட "ஏர்லிப்ட்" பயன்படுத்தி மக்களை மீட்க மாநில அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

கனமழை காரணமாக மும்பையில் விமான சேவை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஏர் இந்தியா, இண்டிகோ, ஸ்பைஸ்ஜெட் போன்ற விமானங்கள் மும்பைக்கான விமான சேவையை ரத்து செய்துள்ளதாக அறிவித்துள்ளன.



# பூமியை நெருங்கும் சிறுகோள்: பாதிப்பு குறித்து நாசா தகவல்

விண்வெளியில் உள்ள சிறுகோள் ஒன்று மணிக்கு 28,946 கிலோமீட்டர் வேகத்தில் பூமியை நோக்கி வந்து கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சிறுகோளுக்கு நாசா விண்வெளி ஆராய்ச்சியாளர் (2011 ஆறு) என்று பெயரிட்டுள்ளனர். இது நேற்று பூமியின் சுற்று வட்டப்பாதையை நெருங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கான கிரகங்கள், சிறுகோள்கள், பல லட்சம் விண்கற்கள் போன்றன விண்வெளியில் உள்ளன.

இந்த சிறுகோள் ஆபத்தானது என்றாலும் பூமிக்கு எதுவித அச்சுறுத்தலும் ஏற்படாது.

இது சுமார் 2.4 மில்லியன் மைல்கள் அளவில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இதன் பாதிப்பு குறித்து நாசா தொடர்ந்தும் கண்காணித்து வருகிறது.



# பறவைக் காய்ச்சல் பரவல் அதிகரிப்பு; ஐக்கிய நாடுகள் சபை கடும் எச்சரிக்கை

ஆசிய – பசுபிக் பிராந்தியத்தில் பறவைக் காய்ச்சல் பாதிப்புகள் அதிகரித்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வைரஸின் புதிய திரிபு தற்போது இனங்காணப்பட்டுள்ளதுடன் அதனைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் கடினமானதாக உள்ளன என அந்த அமைப்பு இன்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்போடியா, சீனா மற்றும் வியட்நாமில் அதிகமான தொற்றுறுதி பதிவாகியுள்ளதுடன், மனித நோய்த் தொற்றுகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் பறவைக் காய்ச்சலின் நிலைமை மிகவும் கவலைக்குரியதாகும் என ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பிராந்திய முகாமையாளர் கச்சென் வோங்சதா போர்ஞ்சாய் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பின்னணியில் கண்காணிப்பு அமைப்புகளை வலுப்படுத்தவும், கோழிப் பண்ணைகளில் உயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தல் மற்றும் பொது மக்களிடத்தில் விழிப்புணர்வை அதிகரிக்கவும் ஐக்கிய நாடுகள் சபையின் ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளிடம் அவர் வலியுறுத்தியுள்ளார்.




# பிலிப்பைன்ஸில் கனமழை பாதிப்பால் 13 பேர் பலி!

தென் சீனக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக வலுப்பெற்றுள்ளது.

“கெமி” என பெயரிடப்பட்டுள்ள இந்த புயலானது கிழக்கு நோக்கி நகர்ந்து தற்போது பிலிப்பைன்ஸ் அருகே மையம் கொண்டுள்ளது.

இதனையடுத்து பிலிப்பைன்ஸில் தொடர்ந்தும் கனமழை பெய்து வருகின்றது.

இதன்காரணமாக பிலிப்பைன்ஸில் இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
















# சாவினைத் தழுவிய தமிழ் அரசியல் கைதிகளை நினைவேந்தி யாழ்ப்பாணத்தில் அஞ்சலி நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கையிலுள்ள சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், பல்வேறு காலகட்டங்களில் சாவினைத் தழுவிய தமிழ் அரசியல் கைதிகளை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் இடம்பெற்றது.

“வெலிக்கடை சிறைப்படுகொலை“ இடம்பெற்ற நாளான நேற்று மாலை 3.05 மணிக்கு, யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா கலையரங்கில் நிகழ்வு இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட அனைவருக்கும் நினைவுச் சின்னமாக மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில், சர்வமதத் தலைவர்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம், அரசியல் கைதிகளின் பெற்றோர் – உறவினர்கள், முன்னாள் அரசியல் கைதிகள், சர்வகட்சி அரசியல் பிரதிநிதிகள், கலாநிதி ஆறு.திருமுருகன், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆசிரியர் சமூகத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.














# கறுப்பு ஜூலை படுகொலையின் நினைவேந்தல்: இலண்டனில் புலம்பெயர் தமிழர்கள் போராட்டம்!


ஈழத்தமிழர்களின் வரலாற்றில் மறக்க முடியாததும் அரச பயங்கரவாதத்தின் அனுசரணையுடன் இடம்பெற்றதுமான 1983 ஜுலைக் கலவரத்தின் 41ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் அஞ்சலி நிகழ்ச்சியும் புலம்பெயர் தமிழ் மக்களாலும் தமிழ் இளையோர்களாலும் இலண்டன் மாநகரில் முன்னெடுக்கப்பட்டது.

பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவும் ஐக்கிய இராச்சியத்தின் தமிழ் இளையோர் அமைப்பும் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வு முன்தினம் பிற்பகல் இலண்டன் நாடாளுமன்றச் சதுக்கத்தில் இடம்பெற்றது.

“தமிழின அழிப்பின் கனத்த நினைவுகளுடன் 41 ஆண்டுகள்” எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் இலங்கை அரசைக் கண்டிக்கும் வகையிலான ஆர்ப்பாட்டப் பேரணியும், பல தசாப்தங்களாகத் தொடரும் தமிழின அழிப்பு தொடர்பான ஆவண நிழற்பட காட்சிப்படுத்தலும், உறுதியேற்பு நிகழ்வும் இடம்பெற்றன.

இதில் புலம்பெயர் தமிழர்கள் மற்றும் பாரிய அளவிலான தமிழ் இளையோர்கள் உணர்வெழுச்சியுடன் கலந்து கொண்டு இலங்கை அரசைக் கண்டிக்கும் கோஷங்களை எழுப்பியதுடன் இலங்கை அரசைத் தண்டிக்குமாறும் பிரித்தானியாவின் புதிய அரசு மற்றும் உலக நாடுகளிடம் கோரிக்கை விடுத்தனர்.





# அரச முகாமைத்துவ ஊழியர்கள் இரத்தினபுரியில் ஆர்ப்பாட்டம்!

(எஸ். இரவீந்திரன்)

சப்ரகமுவ மாகாண அரச காரியாலயங்களில் கடமைபுரியும் முகாமைத்துவ ஊழியர்கள் நேற்று இரத்தினபுரி புதிய நகரத்திலுள்ள இரத்தினபுரி மாவட்ட செயலாளர் காரியாலத்திற்கருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சப்ரகமுவ மாகாண முகாமைத்துவ ஊழியர்கள் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த இருந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 400 பேர் கலந்து கொண்டனர்.

தமக்குரிய சம்பளவுயர்வை அரசாங்கம் உடனடியாக வழங்க வேண்டும், அத்துடன் தங்களின் பதவியுயர்வைப் போட்டி பரீட்சையொன்றினூடாக வழங்க வேண்டும் என்ற கோரிக்கை உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டம் அவர்களினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது

நண்பகல் பகல் 12.30 மணி முதல் சுமார் இரு மணித்தியாலங்கள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.







# தொழிலாளியை வம்புக்கு இழுத்து தாக்கிய தோட்ட அதிகாரிக்கு எதிராகப் போராட்டம்

## நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஓட்றீ தோட்டத்தில்

(ஆ.ரமேஸ்)

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஓட்றீ தோட்டத்தில் தொழிற்சங்க தலைவரான தோட்ட தொழிலாளி ஒருவரை தோட்ட அதிகாரி தாக்கிய சம்பவம் தொடர்பில் தோட்ட அதிகாரியை கைது செய்யுமாறும்,தோட்டத்தைவிட்டு வெளியேற்றம் செய்யும்படியும் தொழிலாளர்கள் நேற்று வியாழகிழமை காலை வீதிக்கு இறங்கி போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இன்வெறி என்.சி தோட்ட சந்தியில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் ஓட்றீ மற்றும் இன்வெறி ஆகிய தோட்ட மக்கள் தோட்ட அதிகாரிக்கு எதிராக கோஷங்கள் எழுப்பி, எதிர்ப்பு வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்திக் கலந்து கொண்டனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

களனிவெளி பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் கீழ் இயங்கும் ஓட்றீ தோட்டத்தில் தொழிலாளியாகவும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தோட்ட கமிட்டி தலைவருமான எஸ். சந்திரகுமார் என்பவர் செயல் பாடுபட்டு வருகிறார்.

தற்போது 1,700 ரூபா சம்பளம் தொடர்பாகவும்,காங்கிரஸ் பொது செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமானுக்கு ஆதரவாகவும் ஓட்றீ தோட்டத்தில் தொழிலாளர்கள் களனி வெளி பெருந்தோட்ட நிறுவனத்திற்கு எதிராக ஒன்றிணைந்த பணிபுறக் கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமையன்று வீதியில் சென்ற தோட்ட கமிட்டி தலைவரான எஸ். சந்திரகுமார் என்பவரை தோட்ட அதிகாரியான காலே ஆராச்சி என்பவர் அழைத்து பேசியமையுடன் தாக்கியும் உள்ளார்.

இந்த தாக்குதலைக் கண்டித்தே தோட்ட தொழிலாளர்கள் இந்தக் கண்டனப் போராட்டத்தில் குதித்துள்ளனர். இது குறித்து காங்கிரஸ் தலைமையகத்திற்கும்,

நோர்வூட் பொலிஸ் நிலையத்திற்கும் அவர்கள் முறையிட்டுள்ளனர்.

இதையடுத்து தொழிலாளி ஒருவரை தாக்குவதற்கு தோட்ட அதிகாரிக்கு அதிகாரம் இல்லை, இதன் விளைவை தோட்ட அதிகாரி உணர வேண்டும் என்பதற்காவும், தாக்குதலை நடத்திய தோட்ட அதிகாரியை கைது செய்வதுடன் தோட்டத்திலிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறும் கோரி தாங்கள் போராட்டத்தில் குதித்தனர் எனத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

நோர்வூட் பிரதேச இ.தொ.கா. அமைப்பாளரான எஸ்.தியாகு என்பவரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கண்டன போராட்டத்தில் இ.தொ.கா தேசிய அமைப்பாளரும் முன்னால் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஏ.பி.சக்திவேல் தளத்திற்கு சென்று விடயத்தை கேட்டறிந்து போராட்டத்திலும் கலந்து கொண்டார்.

இவரிடம் இந்த சம்பவம் குறித்து வினவப்பட்ட போது –

தோட்ட தொழிலாளர் மக்களை வழி நடத்தும் தொழிற்சங்க கமிட்டியான தொழிலாளியை தோட்ட அதிகாரி வம்புக்கு இழுத்து தாக்கியமையை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

அதேநேரத்தில் தொழிலாளர்மீது கை நீட்ட தோட்ட அதிகாரிக்கு எத்தகைய அதிகாரமும் இல்லை. அத்துடன் இந்த தாக்குதல் சம்பவத்தில் நீதிக்கு மரியாதை தவறும் பட்சத்தில் அநீதியை எதிர்த்து நீதியை நிலைநாட்ட நாமும் தயாராகவுள்ளோம். ஆகையால் தோட்ட அதிகாரியின் இந்த இழிவான செயலுக்கு தொழிலாளர்கள் பாடம் கற்பிப்பார்கள்.

அத்துடன் தொழிலாளியை தாக்கிய தோட்ட அதிகாரியை நோர்வூட் பொலிஸார் கைது செய்ய முறைப்பாடு செய்துள்ளோம். இதனூடாக தொழிலாளிக்கு நீதி கிட்டும் என நம்புகிறோம் என அவர் தெரிவித்தார்.

மேலும் தொழிலாளியை தாக்கிய தோட்ட அதிகாரி குளங்கள் வைத்திய சாலையில் சிகிச்சை என்ற பெயரில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.





# சிறுபோகத்தின் பின்னர் பயறு பயிரிடத் திட்டம்



2024 ஆம் ஆண்டுக்கான சிறு போகம் முடிவ டைந்தவுடன் பயறு பயிரி டும் திட்டத்தை ஆரம் பிக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமர வீர தெரிவித்துள்ளார். 2024 சிறுபோ கத்தில் இதுவரை 4,464 ஹெக்டேயர் பயறு பயிரிடப் பட்டுள்ளது.

இதன்மூலம் 6,500 மெட்ரிக் தொன் உற்பத்தி எதிர்பார்க்கப்படுகின்றது.

மூன்றாவது போகமாக இடைப்பட்ட போகத்தில், 8,943 ஹெக்டேயரில் பயறு பயிரிப்படவுள்ளது.

# தோட்டத் தொழிலாளர் சம்பளம் குறித்த இறுதிமுடிவை மீண்டும் எடுக்கக் கூட்டம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பாக மீண்டும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதற்காக எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி சம்பள நிர்ணய சபை ஒன்று கூடவுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களது நாளாந்த சம்பளத்தை 1,700 ரூபாவாக அதிகரித்து அண்மையில் வெளியிடப்பட்ட இரண்டு வர்த்தமானிகளும் நேற்று முன்தினம் இரத்து செய்யப்பட்டன.

சம்பள அதிகரிப்புக்கான வர்த்தமானிகளுக்கு எதிராகப் பெருந்தோட்ட நிறுவனங்கள் வழக்குத் தொடர்ந்திருந்த நிலையில், மேற்படி வர்த்தமானிக்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்து, அடுத்த மாதத்துக்குள் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளவும் உத்தரவிட்டிருந்தது.

இந்தநிலையில் கடந்த சில தினங்களாக மேற்படி சம்பள அதிகரிப்பு வர்த்தமானி இரத்து செய்யப்பட்டமை தொடர்பாக பல்வேறு கருத்தாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாக 1,700 ரூபா சம்பளத்துக்குப் பதிலாக அதனிலும் குறைந்த தொகை ஒன்றுக்கு இணக்கம் எட்டப்படலாம் என்றும் கூறப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், சம்பளத்தொகை தொடர்பாக புதிய இணக்கப்பாட்டை எட்டுவதற்காக சம்பள நிர்ணய சபையை ஒகஸ்ட் மாதம் கூட்ட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.





# வருவாய் நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமை அமைச்சரவை உபகுழு அறிக்கை ஜனாதிபதியிடம்

வருவாய் நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமையை (சுயுஆஐளு) எவ்வாறு திறம்பட பயன்படுத்துவது என்பது குறித்து ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவின் அறிக்கை அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் 'வருவாய் நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS)–பராமரிப்பு சேவைகளைப் பெறுதல்' என்ற அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைய 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் 8 ஆம் திகதி அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தலைமையிலான உப குழுவில் அமைச்சர்களான டிரன் அலஸ் மற்றும் நளீன் பெர்னாண்டோ ஆகியோர் உறுப்பி னர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் அமைப்பின் திறம்படப் பயன்பாடு தொடர்பான உடனடித் தலையீட்டின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் கருத்தில் கொண்டு இந்த அறிக்கையில் 7 முக்கிய பரிந்துரைகள் முன்வைக் கப்பட்டுள்ளன.



# மானிய முறையில் உர விநியோகம்

நாட்டில் உள்ள 3 ஆயிரத்து 476 விவசாயக் குடும்பங் களுக்கு மானிய முறையில் உரம் விநியோகிக்கப்படவுள்ளது.

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதன்படி, நாட்டில் உள்ள மூன்று மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டார் தொண்டு நிறுவனம் ஒன்றினால் இந்த உரத்தொகுதி வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




# வாகனச் சாரதிகளுக்கு இனிமேல் நிரந்தர சாரதி அனுமதி அட்டைகள்

தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்தை வைத்துள்ள வாகன சாரதிகளுக்கு, இவ்வருடம் செப்டம்பர் அல்லது ஒக்டோபர் மாதம் முதல் நிரந்தர சாரதி அனுமதி அட்டைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருந்த வீரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட வேளையில், சாரதி அனுமதி அட்டைகளை இறக்குமதி செய்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாக நிரந்தர சாரதி அனுமதிப்பத்திர அட்டைகளை வழங்க முடியாதிருந்ததாக அவர் தெரி வித்துள்ளார்.

தற்போது தேவையான சாரதி அனுமதி அட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன எனவும் புதிய சாரதி உரிமம் மற்றும் புதுப்பித்தல்களுக்காகச் சாரதி உரிமங்கள் அச்சிடப்பட வேண்டும் என்றும் நிஷாந்த அனுருந்த வீரசிங்க குறிப்பிட்டுள்ளார்.





# போதைப்பொருள் பாவனைத் தடுப்பு சம்பந்தமாக பிரதேச ஊடகவியலாளர்களுக்கும் தெளிவூட்டல்

(பழுவூரான்)

போதைப்பொருளிருந்து இன்றைய சமுகத்தைப் பாது காப்பது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட ஊடகவிய லாளர்களைத் தெளிவுபடுத்தும் நிகழ்வு நேற்று வியாழக் கிழமை மண்முனை வடக்குப் பிரதேச செயலக டேபா மண்டபத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்தின் வழிகாட்டுதலின் கீழ் போதைப்பொருள் முற்தடுப்பு சமூதாய உத்தியோகத்தர் ப.தினேஷின் ஏற்பாட்டில் மாவட்டத்தில் போதைப்பொருள் முற்தடுப்பை மேற்கொள்ளும் நிகழ்வாக இது அமைந்திருந்தது.

இந்நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 20 ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

கிராம, பிரதேச மட்டத்தில் போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்குத் தேவையான விழிப்புணர்வுகளை ஊடகவிய லாளர்கள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் தொடர்பாக இதன்போது எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வளவாளராக மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலைய சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட அதிகாரி ஏ.சி.றஹீம் கலந்து கொண்டு போதைப்பொருள் பாவனை தொடர்பாக பல்வேறு ஆதாரங்களூடாக தெளி வூட்டலை மேற்கொண்டார்.



# வேலைநிறுத்தப் போராட்டங்களைக் கைவிட்டு தொழிலுக்குச் செல்லுமாறு ஜீவன் வேண்டுகோள்

(ஆ.ரமேஸ்)

வேலைநிறுத்தப் போராட்டங்களைக் கைவிட்டு இன்று முதல் தொழிலுக்குச் செல்லுமாறு நானுஓயா உடரதல்ல தோட்டத் தொழிலாளர்களை நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் வலியுறுத்தியுள்ளார்.

அறிக்கை ஒன்றினூடாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் இதனைத் தெரி வித்துள்ளார்.

பெருந்தோட்ட நிறுவனம் ஒன்றின் கீழ் இயங்கும் நானுஓயா உடரதல்ல தோட்டத்தில் கடந்த மே மாதம் தேயிலை காணியில் கோப்பி பயிரிடப்பட்டதை எதிர்த்துத் தோட்ட முகாமையாளரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்ட மூன்று தலை வர்களையும் தோட்ட நிர்வாகம் பதவி நீக்கம் செய்தது.

இதனைத் தொடர்ந்து தேயிலை



தொழிற்சாலைக்குள் கடந்த மே மாதம் 30 ஆம் திகதி அத்துமீறி நுழைந்தார் என அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து, அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட தரப்பினரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நுவரெலியா மாவட்ட நீதிவான் நீதிமன் றம் உத்தரவிட்டது.

மேற்படி சம்பவத்தைக் கேள்வியுற்ற தொழிலாளர்கள் பெருந்தோட்ட நிறு வனத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தொடர்ச்சியாகப் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தினை முன்னெடுத்து வரு கின்றனர்.

இந்த வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக மக்களின் தொழில் மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதால் அனை வரும் பணிப்புறக்கணிப்பு போராட்டத் தினை கைவிட்டு இன்றி முதல் தொழி லுக்குச் செல்லுமாறு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தொழிலாளர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன், உடரதலை தோட்டத் தினை நிர்வகிக்கும் பெருந்தோட்ட நிர்வாகத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

# தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையுண்டு என்பதில் உறுதியாக இருந்தவர் விக்கிரமபாகு கருணாரட்ன

## சபையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு அனுதாபம்

"தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு, தமிழர்கள் இந்த நாட்டில் தங்களுக்கு உரித்தான தனி தேசமாக வாழ உரித்துடையவர்கள் என்று மிக ஆணித்தரமாக சிங்களவர்களுக்கு எடுத்துரைத்த மிக சிறந்த மாமனிதரான சிறந்த முற்போக்கு அரசியல்வாதியான விக்கிரமபாகு கருணாரட்னவை தமிழர்கள் இழந்துள்ளனர் எனக் கருதுகிறோம். அவரது மறைவுக்கு இந்த உயரிய சபை ஊடாக ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்."

– இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பொருளாதார நிலைமாற்ற சட்டமூலம், அரச நிதி முகாமைத்துவ சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில் –

"இந்த நாட்டில் சிறந்த இடதுசாரி



கொள்கையுடையவராக வாழ்ந்து, மண்ணோடும், மக்களோடும் வாழ்ந்த நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன மண்ணில் இருந்து விடை பெற்றுள்ளார்.

81 ஆவது வயதில் காலமான விக்கிரபாகுவை இந்த சபையில் நினைவு கூர்கிறேன்.சிறந்த இடதுசாரி கொள்கைவாதியும், நவசமசமாஜக் கட்சியின் தலைவரும், ஈழத் தமிழர் உரிமை நிலைப்பாட்டில் இறுதி வரை ஒரே நிலைப்பாட்டை கடைப்பிடித்த முற்போக்கு அரசியல்வாதியான விக்கிரமபாகு கருணாரட்னவின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம். அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

தமிழர் பிரச்சினையில் ஒரே கொள்கையை கடைபிடித்து அது தொடர்பான போராட்டங்களில் முன்னிலை வகித்தவர். சிங்கள தேசிய இனத்தில் பிறந்த இனவாதமற்ற பெருமனிதர். இந்த நல் மனிதரை இந்த தேசம் இழந்துள்ளது.

தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு , தமிழர்கள் இந்த நாட்டில் தங்களுக்கு உரித்தான தனி தேசமாக வாழ உரித்துடையவர்கள் என்று மிக ஆணித்தரமாக சிங்களவர்களுக்கு எடுத்துரைத்த மிக சிறந்த மாமனிதரை தமிழர்கள் இழந்துள்ளனர் எனக் கருதுகிறோம்."– என்றார்.

# ரணிலே புலிகளையும் பிரித்தார் மொட்டுக் கட்சியையும் பிரித்தார்

## விசனத்துடன் விவரிக்கின்றார் ந்நாமல்

"தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புலிகளைப் பிரித்தது போன்று மொட்டுக் கட்சியினரையும் பிளவுப்படுத்தியுள்ளார்."

–இவ்வாறு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்கியதன் ஊடாக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பிளவடைந்தது என நாமல் ராஜபக்ஷ தெரிவிக்கின்றார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்கள் மத்தியில் உரையாற்றிய போதே, அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

ரணில் விக்கிரமசிங்கவிற்கு நாம் முழுமையான ஆதரவை வழங்கினோம்.

எமக்கு ஏற்புடையதற்ற செயற்பாடுகளை அவர் செய்தாலும், வார்த்தையில் கூட நாம. அவருக்கு மாறாக எதுவும் சொல்லவில்லை. எனினும், கட்சி என்ற விதத்தில், கட்சியை பிளவுப்படுத்தியதே அவர் செய்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கட்சிகளுக்குள் பிளவை ஏற்படுத்துவதில் மிகவும் கைத்தேர்ந்தவர். அவர் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, நல்லாட்சி அரசாங்கம், ஜே.வி.பி. ஆகிய கட்சிகளுக்குள் பிளவை ஏற்படுத்தினார்.

அதேபோன்று, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கிடையேயையும் பிளவை ஏற்படுத்தினார்.

நாட்டின் நலன் கருதி நாங்கள் அரசியல் தீர்வொன்றை எட்டவுள்ளோம்.



எமது கட்சிக்குப் பொருந்தாத விடயங்களுக்கு இணங்கும் ஜனாதிபதியோ அல்லது வேறு எவராகவிருந்தாலும் அவருடன் நாம் இணங்கப் போவதில்லை.

நாம் அரசியல் தீர்மானமொன்றை எடுப்போம். நாம் ரணில் விக்ரமசிங்கவிற்கு உண்மையாகவே உதவி புரிந்தோம். ஆனால் அவர் பதிலுக்கு நமது மொட்டு கட்சிக்கு அவ்வாறு செய்யவில்லை. அவரது வழமையான பழக்கம் அது. அவர் அதனைச் செய்கிறார். அவரைக் கொண்டு வரும் போது, நாம் அதனை அறிந்திருந்தோம்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் நாம் இன்றும் கலந்துரையாடுகின்றோம். சரியான இடத்திற்கு வருவாரேயானால், அரசாங்கம் தொடர்பில் கலந்துரையாடுவோம். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அனைவருடனும் கலந்துரையாடுவோம். அதன் பின்னர் இறுதி தீர்மானத்தை எடுப்போம்.

– என்றார்.

# கனேடியத் தமிழ் குடும்பத்தை அனலைதீவில் தாக்கி கொள்ளையிட்ட சூத்திரதாரியான பெண் கைதானார்

யாழ்ப்பாணம் அனலைதீவில் கனேடிய தமிழ் குடும்பம் மீது வன்முறை கும்பலொன்று நடாத்திய தாக்குதல் மற்றும் கொள்ளைச் சம்பவம் தொடர்பான பிரதான சந்தேக நபரான பெண் ஒருவர் ஒரு வருடத்தின் பின்னர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.



பரந்தன் பகுதியில் உள்ள பெண்ணொருவரே யாழ்ப்பாணப் பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

அனலைதீவில் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி கனேடிய தமிழ் குடும்பமொன்றின் மீது வன்முறை கும்பலொன்று வாள்வெட்டு தாக்குதலை நடத்தியதுடன், பெருமளவு வெளிநாட்டு நாணயம் மற்றும் பொருள்கள், நகைகள் என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன் மூன்று பேர் கைதுசெய்யப்பட்டனர்.

அதேவேளை பிரதான சந்தேக நபரை தேடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் ஒரு வருடத்திற்கு பின்னர் இந்தச் சம்பவத்தை வெளிநாட்டில் உள்ள ஒருவரின் பணிப்பில் உள்ளூரில் வழிநடத்தியவர் எனக் கருதப்படும் பெண் கைது செய்யப்பட்டார்.

அந்தப் பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது கனடாவில் உள்ள ஐயப்பன் கோயிலொன்றின் தலைவர் சொல்லியே தாக்குதல் நடத்தியதாகத் தெரிவித்தமையுடன் அதற்குரிய ஆதாரங்களையும் சமர்ப்பித்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பெண் சில குற்ற சம்பவ வழக்குகளுடன் தொடர்புடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பெண் சந்தேக நபர் ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது 48 மணி நேரம் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க நீதிவான் அனுமதியளித்தார்.

# ராஜபக்ஷக்களைப் பாதுகாக்கவே முஸ்லிம்களிடம் மன்னிப்புக் கோர அரசாங்கம் தீர்மானித்துள்ளது

## மரிக்கார் எம்.பி. சபையில் தெரிவிப்பு

“கொவிட் தொற்றில் மரணித்த முஸ்லிம் பிரஜைகளின் சடலங்களை எரித்த குற்றச்செயலில் இருந்து ராஜபக்ஷவினரைப் பாதுகாத்து, அதிகாரிகள் மீது குற்றம் சுமத்தவே தற்போது அமைச்சரவை முஸ்லிம் சமூகத்திடம் மன்னிப்பு கோர தீர்மானித்திருக்கிறது.”

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அரச நிதி முகாமைத்துவம் மற்றும் பொருளாதார நிலைமாற்றம் சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“கொவிட் தொற்றில் மரணித்த முஸ்லிம் பிரஜைகளின் சடலங்களை எந்தவித விஞ்ஞான ரீதியிலான தீர்மானமும் இல்லாமல் கட்டாயப்படுத்தி எரிப்பதற்கு ராஜபக்ஷ அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.

அந்த அரசாங்கத்தின் இந்த தீர்மானத்தால் ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகமும் மிகவும் வேதனை அடைந்தது. இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இன்னும் அதன் வேதனையை உணர்ந்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் அரசாங்கம் வெறுமனே முஸ்லிம் மக்களிடம் மன்னிப்பு கோரி இதில் இருந்து தப்பிக் கொள்ள முடியும் என நினைப்பது அரசாங்கத்தின் முட்டாள்தனமான விடயம்.



ராஜபக்ஷவினரை இந்த குற்றத்தில் இருந்து பாதுகாத்து அதிகாரிகள் மீது பழி சுமத்தவே அரசாங்கம் திடீரென இவ்வாறான தீர்மானம் ஒன்றை எடுத்திருக்கிறது.

அப்படியானால் சடலங்களை எரிப்பதற்கு அதிகாரிகள் விஞ்ஞான ரீதியில் அல்லாமல் ஆலோசனை வழங்கி இருந்தால், அந்த தீர்மானத்தை எடுத்தவர்கள் யார்?

அப்போது அமைச்சரவையில் இருந்தவர்கள் ஏன் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் இருந்தார்கள்? அதனால் இடம்பெற்ற சம்பவத்துக்காக முஸ்லிம் மக்களிடம் மன்னிப்பு கோரி, தேர்தலில் முஸ்லிம்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ளலாம் என்று அரசாங்கம் நினைத்துக்கொண்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட முஸ்லிம் வேதனையை இந்தளவு குறைத்து மதிப்பிட வேண்டாம். அதற்கான பாதிப்பு அரசாங்கத்துக்கு கிடைக்கும்.

அரசாங்கம் உண்மையில் முஸ்லிம் சமூகத்திடம் மன்னிப்பு கோருவதாக இருந்தால் இந்த சம்பவத்தின் உண்மையான குற்றவாளிகளை தேடி, அவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

அதேபோன்று, பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்க வேண்டும். இனவாதத்தை அடிப்படையாகக்கொண்டே அன்றைய அரசாங்கம் கொவிட் தொற்றில் மரணித்தவர்களை எரிப்பதற்கு தீர்மானித்தது. அதில் எந்தவி விஞ்ஞான ரீதியிலான அடிப்படையும் இல்லை. எனவே சஜித் பிரேமதாஸ தலைமையிலான அரசாங்கத்தில் இந்த தவறுக்கு காரணமான அனைவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.”– என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 26.07.2024




எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று பொறுமையுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும்.

பணியிடச் சூழலில் முன்னேற்றம் அவசியம். உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் அதிக சொந்தம் கொண்டாடுவீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. எனவே எதிர்காலத்துக்காக சேமிக்க வேண்டும்.

தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவுகளை தவிர்ப்பது நல்லது. காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று நேர்மறையான ஒத்துப் போகும் மனநிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடச் சூழலில் பலன்கள் கலந்து காணப்படும். நீங்கள் திறம்பட செயலாற்ற கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் இருவரிடையே மகிழ்ச்சியை பராமரிக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிட்டு பணத்தை பயன்படுத்தவும்.

இன்று முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது. பதட்டத்தைக் குறைத்து ஆரோக்கியத்தை பராமரியுங்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் அமைதியான சூழ்நிலை காணப்படும். அனுசரணையான மன நிலை காணப்படும்.

பணியிடச் சூழல் திருப்தியை அளிக்கும். நீங்கள் குறைவான முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் அணுகுமுறையில் அர்ப்பணிப்பு காணப்படும். இந்தப் போக்கின் காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் சேமிப்பது கடினமாக இருக்கும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மூலம் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.




இன்று மகிழ்ச்சியளிக்கு வகையில் எந்த நிகழ்வும் காணப்படாது. அமைதியாக இருப்பதும் ஆன்மீக ஈடுபாடும் சிறந்தது.

பணியிடத்தில் முன்னேற்றம் குறைந்து காணப்படும். பணிச்சுமை அதிகமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கட்டுப்பாடு இழப்பீர்கள். இதனால் விவாதம் ஏற்படும். இது இருவரிடையே காணப்படும் அன்பை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி பொறுத்தவரை இன்று சிறப்பான நாளாக இருக்காது. எதிர்கால தேவைக்காக ஒவ்வொரு பணமும் சேமிப்பது சிறந்தது.

கண்களில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.




இன்று வேடிக்கையும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும் நாள். மொத்தத்தில் இன்று மகிழ்ச்சி காணப்படும்.

நீங்கள் உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை அணுகுமுறை பராமரிப்பீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாகவும் உங்களுக்கு சாதகமாகவும் காணப்படும்.நீங்கள் சிறிது பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று நேர்மறையான ஆற்றல் உங்களிடம் காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




ஒழுக்கமான வாழ்வு உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். உங்கள் தன்னம்பிக்கை நிலை உயர்ந்து காணப்படும். நல்ல உறுதி காணப்படும்.

உங்கள் கடின உழைப்பிற்கு பதவி உயர்வு கிடைக்கும். முறையாக திட்டமிடுவதன் மூலம் வெற்றி கிட்டும். உங்கள் தொழிலில் சுறுசுறுப்பு காணப்படும்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் நேர்மை காணப்படும்.இதன் மூலம் ஆரோக்கியமான உறவு காணப்படும்.

இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும். சேமிப்பும் உயரும். பயனுள்ள புதிய முதலீட்டுக்கு உகந்த நேரம். இன்று உங்கள் ஆற்றலும் உறுதியும் அதிகரித்து காணப்படும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். சாதகமான பலன்களை அளிக்கும். நீங்கள் திருப்தியை உணர்வீர்கள்.

நீங்கள் சகஜமாக இருக்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இந்த நேர்மறை போக்கின் காரணமாக உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். எதிர்பாராத பண வரவு காணப்படும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் உறுதியும் உற்சாகமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்றைய விளைவுகளை எண்ணி வருத்தப்படுவதை விட அமைதியாக இருப்பது சிறந்தது. அதிர்ஷ்டமற்ற நிலையை சமாளிக்க நீங்கள் நம்பிக்கையுடன் இருப்பது சிறந்தது.

பணி சம்பந்தமான பயணம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. பயணத்தின் போது தேவையற்ற பதட்டம் காணப்படும்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாக நீங்கள் உணர்சிவசப்படுவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும். இதனை எளிதாக எடுத்துக் கொண்டு அமைதியாக இருக்க வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான சாத்திய உள்ளது. எனவே பணத்தைக் கையாளும்போது கூடுதல் கவனம் தேவை.

இன்று ஆரோக்கியமாய் இருக்க நம்பிக்கையை மீட்டெடுக்க வேண்டும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 26.07.2024




இன்றைய நாளை நன்கு செலுத்த நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். நேர்மறை எண்ணங்களை வளர்க்க வேண்டும்.

நீங்கள் பணிகளை திறமையாக ஆற்ற சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கொள்கைகளை பின்பற்றுவதன் மூலம் நன்மை பெறலாம்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்வது சிறந்தது.

நிதி நிலைமை இன்று சுமூகமாக இருக்காது. உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

மகிழ்ச்சியாக இருப்பதன் மூலம் ஆரோக்கியமாக இருக்கலாம். என்றாலும் பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாள். கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாக முடிப்பீர்கள்.

நீங்கள் திருப்தியான நிலையை உணர்வீர்கள். உங்கள் திறமையை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியும் நல்லுறவும் காணப்படும். உங்கள் துணையைப் பற்றி நேர்மறையான அன்பான எண்ணம் கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமையில் முன்னேற்றம் காணப்படும். இன்று சீரான நிதி நிலைமை காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். இன்று ஒழுக்கமான போக்கும் மன உறுதியும் காணப்படும்.




இன்று நல்ல மாற்றங்கள் ஏற்படும். வருகின்ற வாய்ப்புகளை முறையாக பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் பல நன்மைகளைப் பெறலாம்.

பணி மாற்றம் மற்றும் பணி சம்பந்தமான பயணம் நேரலாம். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கலாம்.

உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். உங்களின் உரையாடும் விதம் காரணமாக நல்ல சூழல் உருவாகும்.

நிதிநிலைமையைப் பொறுத்தவரை பலன்கள் கலந்து காணப்படும். வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று விழிப்புணர்வை பராமரிக்க வேண்டிய நாள். உங்கள் வீட்டில் சுப நிகழ்சிகள் ஏதாவது இன்று திட்டமிட்டிருந்தால் அதனை வேறு நாளைக்கு தள்ளிப் போடுவது சிறந்தது.

பணியைப் பொறுத்தவரை இன்று மும்மரமான நாள். சிறந்த செயல்திறனுக்கு நீங்கள் கூடுதல் முயற்சிகள் எடுக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவு சுமூகமாக இருப்பது உங்கள் கையில் தான் உள்ளது.

நிதி வளர்ச்சி ஸ்திரமாக இருக்காது. நீங்கள் பணம் வீணாகாமல் தடுக்க சாதுர்யமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை காணப்படும். ஒவ்வாமை காரணமாக தொண்டையில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.





